1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வர வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. இலாபத்தை மட்டும் கருதாது, இலாபம் ஒருவருக்கு மட்டுமே போகாமல் பல பேர்களுக்குப் பங்கிடப்படுகிறது என்ற முறையில் கூட்டுறவுத் துறை நன்றாக நடைபெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. த. சோணையா: அமைச்சர் அவர்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் மூன்று தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கிழக்கு ராமநாதபுரத்தில் ஏதேனும் தொழிற்சாலை இருக்கிறதா? அப்படியில்லை என்றால், கிழக்கு ராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிழக்கு ராமநாதபுரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த உறுப்பினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால், அரசாங்கம் உதவி செய்யும்.

பாய் நெய்பவர்களுக்கு இயந்திரங்கள்

*826 வினா.—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி மத்திய பாய் நெசவாளர் கோரை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஜப்பானிய பாய் நெய்யும் மிஷின்களை வாங்கி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

அணைக்கரை—கொள்ளிடம் சாலை

*827 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைக்கரையிலிருந்து கொள்ளிடம் வரை உள்ள கரையை அகலப்படுத்தி, பஸ், லாரி போக்குவரத்துக்குப் பயன்படும்படி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அணைக்கரையிலிருந்து கொள்ளிடத்திற்குத் தெற்குக் கரை வழியாகக் கொள்ளிடம் என்று அழைக்கப் படுகிற ஆணைக்காரன்சத்திரம் பாதையைச் செம்மைப்படுத்தித் தருவதன் மூலம்